## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான திருத்திய நடைமுறைகள் மற்றும் உதவித்தொகையினை ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை**

**அரசாணை (நிலை) எண். 49** **நாள்:23.06.2022**

**சுபகிருது வருடம், ஆனி 9 ஆம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு 2053**

படிக்கப்பட்டது:-

1 அரசாணை(நிலை)எண்.58, ஆதி(ம)பந துறை , நாள்.04.04.2003.

2 அரசாணை(நிலை)எண்.81, ஆதி(ம)பந (ஆதிந-5)துறை, நாள்.10.07.2006.

3 அரசாணை(நிலை)எண்.68, ஆதி(ம)பந(சிஉதி) துறை, நாள்.27.06.2012.

4 அரசாணை(நிலை)எண்.88 ஆதி(ம)பந(சிஉதி) துறை, நாள்.28.08.2020.

5 ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண்.19123/2021, நாள்.29.11.2021.

*******

**ஆணை:-**

மேலே ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பு நிதி (Corpus Fund) மூலம் கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து 10 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் /மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாத இனத்தைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் உள்ளிட்ட 11 எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்பினை தெரிவு செய்து, அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தலா ரூ.50,000/- அல்லது நூல் வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசாணை(நிலை)எண்.81 ஆதி(ம)பந(ஆதிந-5) துறை, நாள்.10.07.2006-இல் வெளியிடப்பட்ட ஆணையில் உள்ள

நடைமுறைகளை தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு மாற்றி திருத்திய நடைமுறைகளை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசிடம் பரிந்துரைத்தார்.

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்காணும் நடைமுறைகளை பின்பற்றி நிதியுதவி வழங்க அரசு ஆணையிடுகிறது.

i. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரைத் தலைவராகக் கொண்ட கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட வல்லுநர் குழுவே சிறந்த படைப்புகளைத் தேர்ந்தெடுக்கும்.

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | அரசுச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் |
| 2 | ஆணையர் / இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் | உறுப்பினர் செயலர் |
| 3 | இயக்குநர், பழங்குடியினர் நலம் | உறுப்பினர் |
| 4 | மேலாண்மை இயக்குநர், தாட்கோ | உறுப்பினர் |
| 5 | இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை | உறுப்பினர் |
| 6 | தமிழ் பேராசிரியர்கள் - இருவர் | உறுப்பினர்கள் |

ii. கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய எப்பொருளாக இருந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் 9 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கு நிதிஉதவி அளிப்பதுடன், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அல்லாதவர் ஒருவருக்கும், பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர் ஒருவருக்கும் இத்தகைய நிதி உதவி ஒவ்வோர் ஆண்டும் அளிக்கப்படும்.

iii. தமிழ்ப் படைப்புகளுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும் மற்றும் பிறமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ்மொழி படைப்புகளுக்கும் நிதியுதவி வழங்கப்படும்.

iv. எம்.பில்., பி.எச்டி. போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக (Exceptional Value) இருந்தாலன்றி நிதியுதவி வழங்கப்படமாட்டாது.

v. ஆதிதிராவிடர் நலத்துறையின் இணையதளத்தில் இவ்விருதுக்கான விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து வரவேற்கப்பட வேண்டும்.

vi. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களில் இந்நிதியுதவி குறித்து அனைவரையும் சென்றடையும் வண்ணம் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் அரசு இணையதளங்களிலும் விளம்பரப்படுத்த வேண்டும்.

vii. விண்ணப்பதாரர் தங்களது படைப்புகளின் இரு நகல்களை, டிஜிட்டல் (Digital) முறையில் அளிக்க வேண்டும்.

viii. விண்ணப்பங்கள் மற்றும் இதர இணைப்புகள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

ix. தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்கள் தமது படைப்புகளை 90 பக்கங்களுக்குக் குறையாமல் தயாரித்து 1000 பிரதிகளுக்கு குறையாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாத காலத்திற்குள், வெளியிடவேண்டும். பொதுவாக ஒரு படைப்பை நூலாக பிரசுரிக்கும்போது ஆயிரம் அச்சுப்படிகள் வெளியிடப்பெறும் நிலையில் அவற்றில் மிகச் சிறப்பான நூல்களைப் பொறுத்து இவ்விதியை தளர்த்தலாம்.

x. அனுமதிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதம் முன்பணமாகவும், எஞ்சிய 50 சதவீதம் பணியை முடித்த பின்பும் வழங்கப்படும்.

xi. நூல் அச்சிடப்பட்ட பின்பு அதன் 10 பிரதிகளை ஆதிதிராவிடர் நல ஆணையரகத்துக்கு இலவசமாக அளிக்க வேண்டும்.

xii. ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்ட படைப்புகளை கொண்டு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தல் கூடாது.

xiii. ஒரு முறை விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு எழுத்தாளர் 5 ஆண்டுகளுக்குப் பிறகே மறுமுறை விண்ணப்பித்தல் வேண்டும்.

xiv. வயது உச்சவரம்பு இல்லை.

xv. இத்திட்டம் தொடர்பாக பெறப்படும் விண்ணப்பங்களில் பொருத்தமுடைமை குறித்து முடிவு செய்வதற்கு வல்லுநர் குழுவே முழு அதிகாரம் படைத்ததாகும்.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்க வைப்பு நிதிக்கு கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து, மேலே பத்தி-3(1) குறிப்பிட்டுள்ள வல்லுநர் குழு மூலம் கீழ்க்கண்ட வகையில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கான நிதியுதவியினை, 2022-2023-ஆம் நிதியாண்டிலிருந்து

ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) ஆக உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

I) ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள்.

II) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர்.

III) பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர்.

5. மேலே பத்தி 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை எழுத்தாளர்களுக்கு நிதியுதவியாக வழங்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. நிதி நிர்வாகம் பொறுப்பு ஆணையர் / இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**க.மணிவாசன்,**
அரசு முதன்மைச் செயலாளர்

__பெறுநர்__

முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/தலைவர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய
மேம்பாட்டுச் சங்கம், சென்னை-600 009.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம்/உறுப்பினர் செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய
மேம்பாட்டுச் சங்கம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம்/உறுப்பினர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய
மேம்பாட்டுச் சங்கம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை- 600 018.
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ் வளர்ச்சி வளாகம்,
முதல் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை-600 008.
முனைவர் கா.மு.பாபுஜி, தமிழ்த்துறை தலைவர், இராமகிருஷ்ணமிஷன்,
விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை-600 004.

முனைவர் து. சானகி, அயல் நாட்டுத் தமிழர் புலம்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600 113.

**<u>நகல்:-</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-09
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதித்துறை, சென்னை-600 009.ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்(அநமு1) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவக்குமார் 23/6/2022
பிரிவு அலுவலர்
23.6.2022